முருகப்பெருமான் துணை

**மகான் தருமர் அருளிய யோக பிரசன்ன ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

**30.06.2021**, புதன்கிழமை

1. தவபலம் பெருக்கி கலியில்
தனித்துவம் பெற்றநல் அரங்கா
அவதாரம் தருமபலமாய் இருக்க
ஆறுமுக அரங்கனுன்பெருமை கூறி
2. கூறியே யோகபிரசன்ன ஆசி
குறையிலா நவகிரக நாயகர்களை தொடர்ந்து
கூறுவேன் பஞ்சபாண்டவருள் தருமர் யானும்
குவலயத்தில் பிலவ மிதுன திங்கள்
3. திங்களில் மூவையோர்திகதி புந்தி வாரம்
(பிலவ வருடம் ஆனி மாதம் 16ம் நாள், 30.06.2021 புதன்கிழமை)
தேசிகன் கேட்க எடுத்துரைப்பேன்
ஓங்கார குடில் படைத்து அரங்கன்
உலகை காக்க செய்யும் தருமம்
4. தருமம் பெருஞ்சக்தி ஆகவும்
தன்னார்வ தொண்டாக தயவாகவும்
ஆறுமுக அரங்கன் வெளிப்பாடாகவும்
அகிலமெங்கிலும் அரங்கேறி வர
5. வருகவே தருமத்தை கொண்டே
வையகம் தனை மாற்றிட
ஆறுமுக அவதாரமாக அருள
அகிலத்தார் அனுகி வணங்கி
6. வணங்கி தீட்சைதனை ஏற்று
வழங்கி தருமத்தில் பொருளுதவி
இணங்கி அரங்கன்வழி செய்து
இனிதே தருமபலம் வளர்த்திட
7. வளர்த்திட மக்களிடை தயவும்
வள்ளல் தன்மையும் பெருகியே
தளர்விலா தரும ஞான சமூகம்
தவராஜன் அருளால் உருவாகி
8. ஆகியே எங்கும் அமைதி
ஆபத்தில்லா பெரும் பாதுகாப்பு
மகிழவே மக்களிடை நற்குணம்
மனமாயை துன்பம் இன்றி
9. இன்றியே சமத்துவ சமாதான
இனபேதம் இல்லா வண்ணம்
நன்றா ஞானத் தலைமையும்
ஞானவான்கள் ஆளுமையும் அமைந்து

10. அமைந்துமே பாதுகாப்புமிக்க
ஆறுமுகனார் தயவும் கொண்ட
நேமமுள்ள ஞான ஆட்சியாக
நிலவுலகம் மாற்றம் கண்டு

11. கண்டுமே அரங்கன் தருமத்தால்
கருணையுள்ள கொள்கையால்
உண்டாகும் ஞானயுகமாக
உரைத்திட்ட யோகபிரசன்ன ஆசி முற்றே

—சுபம்—